பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**17 03 2026** **TUESDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

1. தமிழகத்தில் இதுவரை 23 கோடியே 28 லட்சம் ரூபாயை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்துள்ளதாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

2. தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி, 100 சதவீத வாக்குப்பதிவை உறுதிசெய்யும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

3. சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்வதற்கான கூட்டணி பேச்சுவார்த்தைகள் சுமூகமாக நடைபெற்று வருவதாக திமுக கூறியுள்ளது.

4. தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிக்கு வந்தால், பெண்களுக்கு பாதுகாப்பும், சமூகத்திற்கு நல்லாட்சியும் கொடுப்போம் என்று அஇஅதிமுக தெரிவித்துள்ளது.

5. நாட்டில் போதுமான அளவுக்கு பெட்ரோல், டீசல் இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி நடத்தப்பட்ட சோதனையின்போது இதுவரை 23 கோடியே 28 லட்சம் ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தேர்தல் செலவினங்கள் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்காக அனைத்து தொகுதிகளிலும் பறக்கும் படை மட்டுமில்லாமல் 25 துறை சார்ந்த கண்காணிப்புக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தற்போது, 234 தொகுதிகளிலும் தலா ஒன்பது பறக்கும் படைகள், ஒன்பது நிலை கண்காணிப்புக் குழுக்கள் என்ற விகிதத்தில் மாநிலம் முழுவதும் இரண்டாயிரத்து 160 பறக்கும் படைகளும், நிலை கண்காணிப்புக் குழுக்களும் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பொதுமக்கள் புகார் தெரிவிப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்தல் கட்டுப்பாட்டு அறை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடத்தை நெறிமுறைகள் பின்பற்றப்படுவது தொடர்பாக, மாவட்ட தேர்தல் அதிகாரிகள் கண்காணித்து வருவதாகவும், இதுவரை தமிழகம் முழுவதும் ஒரு லட்சத்து 68 ஆயிரம் சுவர் விளம்பரங்கள் நீக்கப்பட்டு, குற்றவியல் நடவடிக்கையை தொடர்வதற்கான முதல் தகவலறிக்கை பதியப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

பொதுமக்கள், அரசியல் கட்சியினர், வியாபாரிகள் ரொக்கம் எடுத்து செல்லும்போது அதற்குரிய ஆவணங்களை கட்டாயமாக வைத்திருக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இத்தொகை வாக்காளர்களுக்கு விநியோகிப்பதற்காக எடுத்து செல்லப்படும் தொகை இல்லை என்பதை தணிக்கை அதிகாரிகள் முடிவு செய்வார்கள் என்றும் திருமதி அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி, 100 சதவீத வாக்குப்பதிவை உறுதிசெய்யும் வகையில் மாநிலம் முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

தருமபுரி மாவட்டத்தில் வாக்களிப்பதை வலியுறுத்தி நடைபெற்ற கையெழுத்து விழிப்புணர்வு நிகழ்ச்சியை ஆட்சியர் திரு சதீஷ் தொடங்கிவைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — தண்டபாணி — 36 Sec. )**

செங்கல்பட்டு மாவட்டத்தில், துணை ஆட்சியர் திரு மணியரசன் தலைமையில் தேர்தல் வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — சுரேகா — 42 Sec. )***

விழுப்புரம் மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி, மாவட்ட ஆட்சியர் திரு ஷேக் அப்துல் ரகுமான் விழிப்புணர்வு பேரணியை இன்று தொடங்கிவைத்தார்.

இதில், கலந்துகொண்ட மகளிர் சுயஉதவிக்குழுவினர், பதாகைகளை ஏந்தியும், துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு விநியோகித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இளம் வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை தவறாமல் செலுத்த வேண்டும் என்று நாமக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி துர்கா மூர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், **VVPAT** கருவி ஆகியவை செயல்படும் விதம், வாக்கு பதிவாகும் முறை, அதனை **VVPAT** கருவி மூலம் சரிபார்த்தல் குறித்து மாணவ, மாணவியருக்கு செயல் முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்வதற்கான கூட்டணி பேச்சுவார்த்தைகள் சுமூகமாக தொடர்ந்து நடைபெற்று வருவதாக திமுக-வின் மூத்த தலைவரும், மாநில அமைச்சருமான திரு ரகுபதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் 23-ஆம் தேதிவரை நேர்காணல்களும், பேச்சுவார்த்தைகளும் நடைபெற உள்ளதாக கூறினார்.

தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று எதிர்க்கட்சிகள் கூறிவருவதை மறுத்த அவர், பெண்களுக்கு எதிராக நடைபெற்றதாக கூறப்படும் சம்பவங்களுக்கு காவல்துறையினர் உடனடியாக உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டதாக தெரிவித்தார்.

தமிழகத்தில் எங்கேயும் போதைப்பொருள் உற்பத்தி கிடையாது என்று கூறிய அவர், கடைமடை பகுதி என்ற நிலையில் காவல்துறையினர் சோதனைச்சாவடிகள் அமைத்து போதைப்பொருள் புழக்கத்தை தடுத்து நிறுத்துவதாக அவர் கூறினார்.

இந்தியாவிலேயே விழிப்புணர்வோடு பணியாற்றுகின்ற காவல்துறை தமிழக காவல்துறை என்று திரு ரகுபதி சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கு பிரச்சினைக்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை வலியுறுத்தி தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பில் இன்று மாநிலம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

சென்னையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கலந்துகொண்டு பேசினார்.

பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களும், இளையோரிடையே போதைப்பொருள் புழக்கமும் அதிகரித்துள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

திமுக அளித்த தேர்தல் வாக்குறுதிகளில் 4-ல் ஒரு பங்கைகூட நிறைவேற்றவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிக்கு வந்தால், பெண்களுக்கு பாதுகாப்பும், சமூகத்திற்கு நல்லாட்சியும் கொடுப்போம் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

திருப்பூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பேசிய பிஜேபி மூத்த தலைவர் திருமதி வானதி சீனிவாசன், தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று கூறினார்.

ஈரோட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், தமாக தலைவர் திரு ஜி கே வாசன் கலந்துகொண்டார்.

திமுக ஆட்சியில் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி குன்றியுள்ளது என்றும், கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் இருப்பது மட்டுமின்றி மக்கள் மீது வரிகளை சுமத்துவதாகவும் அவர் குறை கூறினார்.

<<<<<<>>>>>>

நாட்டில் போதுமான அளவுக்கு பெட்ரோல், டீசல் இருப்பதாக மத்திய பெட்ரோலியத்துறை இணைச் செயலர் திருமதி சுஜாதா ஷர்மா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூடுதல் நுகர்வோர்கள் குழாய் மூலம் சமையல் எரிவாயுவை பயன்படுத்த வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

இதற்காக மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், எரிவாயு விநியோகத்திற்கான குழாய் அமைப்பதற்கு உடனடியாக அனுமதி வழங்க வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு மத்திய அரசு கடிதம் எழுதியுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பான, புதிய விண்ணப்பங்களுக்கு 24 மணிநேரத்திற்குள் அனுமதி அளிக்க வேண்டும் என்றும் திருமதி சுஜாதா ஷர்மா அறிவுறுத்தினார்.

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

ஈரோடு மாவட்டத்தில், புதிய மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக கிரண் சுருதி இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்

----------------

நாமக்கல் மாவட்டத்தில் விடுதிகளில் தங்கும் நபர்களின் பெயர்கள், முகவரி, தொலைபேசி எண் அடங்கிய விவரங்கள் பதிவேடுகளில் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் என்று மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி துர்கா மூர்த்தி வலியுறுத்தியுள்ளார்.

----------

சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே மேச்சேரியில் லாரியும், காரும் நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

----------------

சென்னை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையில், பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக்குழு மற்றும் வீடியோ கண்காணிப்புக்குழுக்களின் ஜி பி எஸ் கருவிகள் பொருத்தப்பட்ட வாகனங்கள் மூலம் **24** மணிநேரமும் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்திய கால்பந்து லீக் போட்டியில் ராஜஸ்தான் **FC** அணி, **Real** காஷ்மீர் அணியை வென்றது.

ஜெய்பூரில் நடைபெற்ற இப்போட்டியில் **1-0** என்ற கோல் கணக்கில் ராஜஸ்தான் அணி வெற்றிபெற்றது.

**<<<<<<END>>>>>>**